# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1857/9 - 2014 අප්‍රේල් මස 09 වැනි බදාදා - 2014.04.09

*1857/9 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2014, மாச்சு 31.*

ஒழுங்குவிதிகள்

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கு ஏற்ப, 2007, யூன் 20 ஆந் திகதிய 1502/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், 2007, யூலை 18 ஆந் திகதிய 1506/06 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மற்றும் 2008, ஏப்பிறல் 22 ஆந் திகதி 1546/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி ஆகியவற்றில் திருத்தப்பட்டவாறு பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.*

பந்தி *2.1* இன் சொற்கள் மற்றும் தொகைகளை நீக்குவதன் மூலம் :-

“ஒழுங்குவிதி *3* அல்லது *4* இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் அல்லது பங்குடமை ஒன்று *2007*, ஏப்பிறல் *1* ஆந் திகதியோ அல்லது அதன் பின்னர் ஏதேனும் தொடர்புடைய காலாண்டு தொடர்பாக:-

(i) அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய வியாபாரம் அல்லது வர்த்தகத்திலிருந்தான குறிப்பிட்ட காலாண்டிற்கான விற்பனைப் புரள்வினைக் கணித்தல் ;

(ii) மேலே குறிப்பிட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) உப பிரிவில் (அதிலுள்ள விதிவிலக்குகள் தவிர) ஏற்பாடுகளைக் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை ;

(iii) அவ்வாறு கணிப்பிடப்பட் விற்பனைப் புரள்விற்கான பொருளாதார சேவைக் கட்டணத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக அட்டவணையில் 12 ஆம் விடயத்தில் குறிப்பிட்ட வீதத்தில் கணிப்பிடவும்.” எனவே,

மற்றும் சொற்கள் மற்றும் தொகைகளை பிரதியீடு செய்வதன் மூலம் :-

“ஒழுங்குவிதி 03 இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் அல்லது பங்குடமையொன்று 2007, ஏப்பிறல் 1 ஆந் திகதியோ அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் தொடர்புடைய காலாண்டு தொடர்பாக :-

(i) அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய வியாபாரம் அல்லது வர்த்தகத்திலிருந்தான குறிப்பிட்ட காலாண்டிற்கான விற்பனைப் புரள்வினைக் கணித்தல் ;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவில் (அதிலுள்ள விதிவிலக்குகள் தவிர) ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளத் தேவையில்லை மற்றும் ;

(iii) அவ்வாறு கணிப்பிடப்பட் விற்பனைப் புரள்விற்கான பொருளாதார சேவைக் கட்டணத்தினை ;

(அ) 2011, மாச்சு 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ முடிவடையும் தொடர்புடைய ஏதேனும் காலாண்டுக்கான மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக I ஆம் அட்டவணையின் 12 ஆம் விடயத்தில் ;

(ஆ) 2012, மாச்சு 31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ முடிவடையும் தொடர்புடைய ஏதேனும் காலாண்டிற்கான மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக II ஆம் அட்டவணையின் 3 (ஆ) ஆம் விடயத்தில் ; மற்றும்

(இ) 2012, ஏப்பிறல் 1 ஆந் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ ஆரம்பமாகும் தொடர்புடைய ஏதேனும் காலாண்டிற்கான மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக III ஆம் அட்டவணையில்,

குறிப்பிட்ட வீதத்தில் கணிப்பிடவும்” எனவே,

4- 694